இயற்கைச் சிற்பி ஆண்டுகள் பல இழைத்த இணையில்லாக் காட்சி, தெவிட்டா இன்பத் தோற்றம் கொண்ட “பொற்கோட்டிமயமும் பொதியமும் போன்றதே” என இமயமலைக்கு இணையாகச் சிறப்பிக்கப்படும் பொதிகை மலையின் அடிவாரத்தில் அழகுற அமைந்திருக்கும் இருதயகுளம் பங்கு, நூறு ஆண்டுகளுக்கும் மேலாக கிறிஸ்தவத்தில் வேரூன்றி வளர்ச்சி பெற்று வந்திருக்கின்றது

திருநெல்வேலி மாவட்டம், அம்பை வட்டம், விக்கிரமசிங்கபுரத்திற்கு மிக அருகில் அமைந்திருக்கும் இந்த ஊர் மலைகளும் பாறைகளும், குன்றுகளும், மரங்களும், சூழ்ந்து இயற்கை எழில்மிக்க அற்புதமான பகுதி. பாபநாசம் - திருநெல்வேலி சாலைக்கு மிக அருகில், அமலி பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு மிக அருகில் அமைந்திருக்கின்றது.

**பெயர்க் காரணம் :**

பெரிய குன்றுகளால் சூழப்பட்டுள்ளது தான் இந்த இருதயகுளம் என்ற கிராமம். உச்சங்குளம் (உச்சன்குளம் என்றால் “பெரிய மனிதனின் குளம்” என்பது பொருள். என்று ஆரம்பத்தில் அழைக்கப்பட்ட இருதயகுளம் பகுதியில் சுவாமி கௌசானல் அடிகளார் அவர்கள் திரு இருதய சகோதரர் சபையை ஏற்படுத்தியதன் காரணமாக உச்சங்குளம் என்ற பகுதி இருதயகுளமாக மாற்றப்பட்டது.

இயேசுவின் இதய அன்பால் ஈர்க்கப்பட்டு, தூய லூர்து அன்னையின் அரவணைப்பில் நூறு ஆண்டுகளுக்கும் மேலாக கிறிஸ்தவ சமயம் நிலைத்து, பல்வேறு மக்களின் இதயங்களில் விசுவாசத்தை இன்றும் விதைத்து வருவதற்குக் காரணம் இங்குள்ள திரு இருதய ஆலயமும், தூய லூர்து அன்னைத் திருத்தலக் கெபியும் ஆகும்.

### 1.1 இருதயகுளம் உருவான விதம் :

**1893 ஏப்ரலில்** பாளையங்கோட்டை மறை மாவட்ட அதிபரான **சுவாமி வெர்டியர் (ஞானப்பிரகாசியார் சுவாமி)** என்ற சேசுசபைத் துறவி பாபநாச மலைப்பகுதியில் **'கட்டளைமலை'** என்ற பெரிய பண்ணையை விலைக்கு வாங்கினார். அதோடு சேர்ந்த விக்கிரமசிங்கபுரம் ஊர்ப்பகுதியில், மலையடிவாரத்தில் உள்ள நிலப்பகுதியையும் வாங்கினார்.

**அருட்திரு.வெர்டியர்** சுவாமிகளை அடுத்துப் பாளையங்கோட்டை அதிபரான **சுவாமி கௌசானல்,** உச்சன்குளத்தில் ஒரு களஞ்சியமும், பண்ணைவீடு ஆகியவற்றை அமைத்தார். மலையினின்று வரும் காப்பி, தேயிலை மற்றும் நறுமணப்பொருள்கள் ஆகியவற்றைச் சேர்த்து வைக்க களஞ்சியமும், விவசாயப் பண்ணையில் பணிபுரியும் வேலையாட்கள், கால்நடைகள் தங்க, கட்டிடங்கள் போன்றவையும் இப்பண்ணை வீட்டில் இடம் பெற்றன. இந்தக் கட்டிடத்தின் கீழ்ப்பகுதியில் ஒரு கோவிலையும் அமைத்தார். இதுவே பின்னாளில் திரு இருதய ஆலயமாக உருவெடுத்தது.(பழைய கோவில்)

### 1.2 கௌசானல் அடிகளாரின் தொலைநோக்குப் பார்வை :

கட்டளைமலைப் பண்ணையை விலைக்கு வாங்கிய போது, அதனைக் கவனிக்க **திரு.H.F.கிளைவ்** என்பவர் நியமிக்கப்பட்டார். இவர் அயர்லாந்து நாட்டைச் சேர்ந்தவர். கத்தோலிக்கர், இருப்புப் பாதைத் துறையில் ஓய்வு பெற்ற

அதிகாரி. அவரும் அவருடைய மனைவியும் இருதயகுளம் பண்ணைவீட்டில் தங்கியிருந்து நிர்வாகம் செய்து வந்தனர்.[1] உடல் நலத்தின் காரணமாக இந்தத் தம்பதியினர் அயர்லாந்துக்குத் திரும்பிச் செல்ல தீர்மானித்த போது மறைமாவட்ட அதிபராக அப்போது இருந்த **அருட்தந்தை கௌசானல்** அடிகளார் அவர்களுக்குப் பெரும் அதிர்ச்சி ஏற்பட்டது. பல ஏக்கர் பரப்புள்ள கட்டளை மலைப் பண்ணையை நிர்வகிக்க நம்பிக்கைக்குரிய பணியாளர்கள் கிடைப்பார்களா? என்ற எண்ணம் அவரை மிகவே வருத்தியது.

விவசாயப் பண்ணையைப் பேணிப் பாதுகாக்க பொறுப்பானவர்களைத் தயாரிப்பது மட்டுமல்லாமல் விவசாயப் பண்ணை வழியாக மறைப்பணியாற்றி பெரும்பான்மை மக்களின் கிறிஸ்தவத்தில் இணைக்க வேண்டும் என்ற ஆர்வம் கொண்டவராய் கட்டளை மலைப் பகுதியில் வாழ்ந்த மலைச் சாதியினரைச் சந்தித்தார்.[2] அவர்களுடைய சமூக, பொருளாதார, ஆன்மீக, வாழ்வைச் சீரமைக்க, வளர்த்தெடுக்க என்ன செய்யலாம் என்பதை ஆழ்ந்து சிந்தித்து செயல்படுத்த ஆயத்தமானார்.

### 1.3 திரு இருதய சபையின் தோற்றமும், வளர்ச்சியும்:

**1894ம் ஆண்டு பாப்பிறை 13ம் சிங்கராயர்** சிறப்பான ஒரு நாணயத்தை வெளியிட்டார். அதன் ஒரு பக்கத்தில் **"இந்தியாவே உன் மக்கள் தாம், உனக்கு மீட்பை கொண்டவர்"** என்று பொறிக்குமாறு செய்த நிகழ்ச்சி அருட்திரு. கௌசானல் அடிகளாரின் மனத்திரையில் ஓடிற்று. இந்தியாவை மீட்க இந்தியர்கள் தான் முன் வர வேண்டும். தமிழகத்தில் திருமறையைப் பரப்ப தமிழர்கள் தாம் முன்வர வேண்டும். எனவே தமிழகத்தில் தமிழர்களைக்

---

[1] **அருட்சகோ. சேவியர் சே.ச.**, பார்ம் கவுஸ், இருதயகுளம் நாள்:20-12-1-2011

[2] குழந்தை அருள் திஇச., நிலவின் தவம், (திருநெல்வேலி: திருஇருதய சகோதரர்கள் சபை,1999) பக். 35-40.

கொண்டு, தமிழ் பண்பாட்டில் ஊறித்திளைத்த ஒரு துறவற சபையைக் கொண்டு தமிழகத்தில் திருமறை ஒளியை ஏற்ற முயற்சி மேற்கொண்டார்.

**1899ம் ஆண்டு டிசம்பர் 31ம் நாள்** 19ஆம், 20 ஆம் நூற்றாண்டினுள் உலகம் கண் விழிக்கும் முன், இருதயகுளம், குருக்கள் இல்லத்திலுள்ள கோவிலில் திருப்பலி நிறைவேற்றி முதல் மூன்று அருட்சகோதரர்களை அவர்கள் அளித்த தனிப்பட்ட **ஏழ்மை, கற்பு, கீழ்ப்படிதல்** வார்த்தைப் பாட்டை உறுதிப்படுத்தி புதியதொரு சபையைத் தோற்றுவித்தார் **அருட்திரு கௌசானல் அடிகளார்.**[3] ஆனால் திருச்சபையிடமிருந்து அதிகாரப் பூர்வமாக ஒப்புதல் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**சபையின் பெயரும், பணியும் :**

இத்துறவறசபை **"இயேசுவின் திரு.இருதய சகோதரர் சபை"** என்ற பெயரால் அழைக்கப்பட்டது. இச்சபையின் தாய்வீடு இருதயகுளத்தில் இருக்கின்றது. இச்சகோதரர்களின் தலைசிறந்த பணிகளாக இரண்டைக் குறிப்பிடலாம்.

1. **போதனையினாலும், தியானங்களினாலும், வாழ்வு முறையாலும் இயேசுவின் திருஇருதய பக்தியை மக்கள் மத்தியில் பரவச் செய்வது.**
2. **திருமறைத் தொண்டர்களுக்கும், திருமறை நிறுவனத்திற்கும்(Mission) பல துறைகளிலும் உதவி புரிதல் ஆகியவை.**

எனவே தங்களுடைய பொறுப்பில் ஒப்படைக்கப்பட்ட இந்த பகுதி மக்களை மறைப்பணியாளராகவும், திருமுழுக்களிப்பவராகவும், ஆசிரியர்களாகவும் உருவாக்கும் பணியை சிரமேற்கொண்டு செய்யத் தொடங்கினர்.

---

[3] நேர்காணல் - **அருட்சகோ. சேசுராஜ் தி.இ.ச.**, திருஇருதய இல்லத் தலைவர், இருதயகுளம் நாள்: 21-12-2011

திரு இருதய சபைச் சகோதரர்களின் சிறப்புப் பணிகளாகப் பள்ளிகளை நடத்துவது, மருத்துவ இல்லங்களில் பணியாற்றுவது, கருணை இல்லங்களைக் கவனிப்பது ஆகியவை இவர்களது முதன்மையான பணி. தச்சு வேலை, மரம் அறுத்தல், தையல் வேலை, சமையல் வேலை, ஆகியவற்றை மக்களுக்குக் கற்றுக் கொடுத்தல், சபை(மிஷன்) சொத்துகளை நிர்வகித்தல், விவசாயம் தொடர்பான எல்லா வேலைகளையும் கவனித்தல் போன்றவற்றையும் இவர்கள் செய்து, இப்பகுதி மக்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்ற முயற்சி மேற்கொண்டனர்[4].

**இருதயகுளம் பங்கு உருவாதல் :**

**அருட்திரு.கௌசானல்** அடிகளாரின் கடின முயற்சியாலும், தொலைநோக்குப் பார்வையாலும், **திரு இருதய சபைச் சகோதரர்களின்** அயராத உழைப்பாலும் இருதயகுளத்தில் கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை அதிகமாயிற்று. அவர்களுடைய ஆன்மீகத் தேவையை நிறைவேற்ற அருட்பணியாளர்கள் நிலையாக இருந்து பணியாற்றும் தேவை ஏற்பட்டது. **1919 வரை** இருதயகுளம் ஒரு தனிப்பங்காக செயல்படவில்லை. பாளையங்கோட்டையிலிருந்து மறைமாவட்ட அதிபரோ, தென்காசி, வீரவநல்லூர். பங்குத் தந்தையரோ சில சமயம் இருதயகுளத்திற்கு வந்து, சில நாட்கள் தங்கி மக்களின் ஆன்மீகத் தேவைகளை நிறைவேற்றிவிட்டு திரும்பிச் செல்வர். முதன் முதலாக **1919ல் அருட்திரு.J.அருளானந்தம்** இருதயகுளத்துக்கென நியமனம் பெற்றார். அதன்பிறகு **1924ல் அருட்திரு. தலோன்** பங்குக் குருவாக நியமனம் பெற்ற பின்னரே இருதயகுளத்தோடு பல கிராமங்கள் இணைக்கப்பட்டன[5]. **1943ம்** ஆண்டு தான்

[4] **அருட்சகோ. சேசுராஜ் தி.இ.ச.**, திருஇருதய இல்லத் தலைவர், இருதயகுளம் நாள்: 21-12-2011

[5] பங்குத்தந்தையின் நாள் குறிப்பேடு (Parish Diary)

தென்காசியிலிருந்து இருதயகுளம் பிரிந்து தனிப்பங்காக முழுமையான நிலைக்கு உயர்த்தப்பட்டது[6].

**பழைய ஆலயத்தின் தோற்றம்:**

புதிதாய் மனம் திரும்பியவர்களை இருதயகுளத்தில் குடியேற்றிய பின் இருதயகுளத்தில் படிப்படியாக கிறிஸ்தவ மறையின் செல்வாக்கும் பரவலாயிற்று. ஆகவே இதுவரை குருக்களின் தனிப்பட்ட செப ஆலயமாகச் செயல்பட்ட பண்ணைவீட்டுக்கு கீழே அமைக்கப்பட்ட சிற்றாலயத்தை, பொதுமக்களின் ஆன்மீகத் தேவையை நிறைவேற்ற, ஞாயிறுதோறும் திறந்துவிட்டனர். பின்னர் படிப்படியாக ஆலயத்தை விரிவுபடுத்தத் தொடங்கினர். **1904ல் அருட்திரு.கௌசானல்** ஆலயத்தை கீழ்பக்கமாக விரிவுபடுத்தி பின்னர் அதற்கு அருகில் பெரிய மணிக்கூண்டையும் கட்டினார். **1913ல் அருட்திரு. கிராஞ்ச் அடிகளார்** ஆலயத்தின் இருபக்கங்களிலும் மண்டபங்களை அமைத்து விரிவுபடுத்தினார்.[7]

**புதிய ஆலயத்தின் தோற்றம் :**

**அருட்திரு.கிராஞ்சு அடிகளார்** மிகப்பெரிய ஆலயம் ஒன்றை உருவாக்கி, எதிர் காலத்தில் பேராலயமாக உயர்த்தும் எண்ணத்தோடு, பிரான்சு தேசத்தில், “மசபியேல்” மலைக்குகையில் அமையப் பெற்ற மிகவும் பிரசித்தி பெற்ற தூய லூர்து அன்னைக் கெபி மற்றும் பசிலிக்கா போன்று இந்த இருதயகுளத்தையும் மாற்ற வேண்டும் என்ற கனவு கண்டார். ஆனால் **அருட்திரு.கிராஞ்சு** தனது கனவை நிறைவேற்றுமுன் இறைவனடி சேர்ந்தார். அதன்பின் பங்குப் பொறுப்பேற்ற **அருட்திரு. சபாத்** அடிகளார், **அருட்திரு. கிராஞ்ச்** அடிகளாரின்

---

[6] தென்காசிப்பங்கு நூற்றாண்டுமலர்

[7] பங்கு சந்திப்பு மலர் (14,15,16-11-2008)

திட்டத்தை நிறைவேற்ற தூய லூர்து அன்னைக் கெபிக்கு அருகே பெரிய ஆலயத்தை எழுப்ப கற்களை அடிக்க ஏற்பாடு செய்தார்.[8]ஆனால் **1933ம் ஆண்டில் அருட்திரு.கிராஞ்சு** அடிகளாருக்கு அருகிலேயே விரைவில் **அருட்திரு.சபாத்** அடிகளாரும் அடக்கம் செய்யப்பட்டார். அதன்பின்னர் பங்குப் பொறுப்பேற்ற **அருட்திரு. இஞ்ஞாசி இருதயம்** மற்றும் **அருட்திரு.லெமாய்** அடிகளார் பல்வேறு போராட்டங்கள், பொருளாதார நெருக்கடிகளுக்குப் பின்னர் புதிய ஆலயத்தை நிறைவுக்குக் கொண்டு வர பெருமுயற்சி மேற்கொண்டனர். **1966 அக்டோபர் 3ம்** நாள் புதிய ஆலயத்தில் முதல் திருப்பலியை **அருட்திரு. லெமாய் அடிகளார்** நிறைவேற்றினார்.[9] இருந்தபோதும் ஆலயப் பணிகள் முழுமையாக நிறைவேற்றப்படவில்லை. 2007ம் ஆண்டு அருட்திரு.A.ஜேம்ஸ் அடிகளாரின் காலத்தில் ஆலயத்தின் தரைத்தளம் மார்பிள் போட்டு புதுப்பிக்கப்பட்டு பாளை மறைமாவட்ட ஆயர் **மேதகு ஜீடு பால்ராஜ்** அவர்களால் 16.12.2007 அன்று அர்ச்சிக்கப்பட்டு புனிதப்படுத்தப்பட்டது.[10]

### இருதயகுளம் பங்கில் பணியாற்றிய அருட்தந்தையர்கள்

| | | |
|---|---|---|
| 1. | அருட்திரு. அருளானந்தம் சே.ச., பணியேற்பு | 1919 |
| 2. | அருட்திரு. மார்டின் சே.ச., | 1923 |
| 3. | அருட்திரு. தலேன் சே.ச., | 1925 |
| 4. | அருட்திரு. கிராஞ்சு சே.ச., | 1928-1930 |
| 5. | அருட்திரு. இக்னேசியஸ் சே.ச., | 1931-1933 |
| 6. | அருட்திரு. சபாத் சே.ச., | 1933-1934 |

[8] பங்குத்தந்தையின் நாள் குறிப்பேடு (Parish Diary)

[9] பங்குத்தந்தையின் நாள் குறிப்பேடு (Parish Diary)

[10] ஆலய தரைத்தளம் அமைத்தல் கல்வெட்டு (16-12-2007)

7. அருட்திரு. டியோனட் சே.ச., 1934-1935

8. அருட்திரு. சாந்தப்பர் சே.ச., 1935-1938

9. அருட்திரு. செல்வம் சே.ச., 1938-1941

10. அருட்திரு. குத்தூரியர் சே.ச., 1941-1945

11. அருட்திரு. மோத்தா சே.ச., 1945-1947

12. அருட்திரு. முடியப்பன் சே.ச., 1947-1948

13. அருட்திரு. அந்தோணிசாமி 1948-

14. அருட்திரு. லெமாய் சே.ச., 1948-1950

15. அருட்திரு. பிரான்கோ சே.ச., 1950-

16. அருட்திரு. இக்னேசியஸ் இருதயம் சே.ச., 1950-1958

17. அருட்திரு. லெமாய் சே.ச., 1958-1967

18. அருட்திரு. ஆரோக்கிய சாமி சே.ச., 1967-1970

19. அருட்திரு. ஜார்ஜ் ஜோசப் சே.ச., 1970-1971

20. அருட்திரு. **V.M.** ஜோசப் சே.ச.,

1971-1973

21. அருட்திரு. சந்தியாகு சே.ச., 1973-1979

22. அருட்திரு. எரோணிமுசு சே.ச., 1979-1982

23. அருட்திரு. **M.** அருள் 1982-1988

24. அருட்திரு. **S.L.** அருளப்பன் 1988-1994

25. அருட்திரு. அல்போன்ஸ் 1994-2001

26. அருட்திரு. **S.L.** ஸ்டீபன் 2001-2005

27. அருட்திரு. **A.** ஜேம்ஸ் 2005-2010

28. அருட்திரு. அந்தோணி சேவியர் 2010-2011

29. அருட்திரு. ம. அருள் அம்புரோசு 2011-

**தூய லூர்து அன்னைத் திருத்தலக் கெபி**

இருதயகுளம் பங்கின் பெருமையே **தூய லூர்து அன்னையின் கெபித் திருத்தலமாகும்**. இந்து, கிறிஸ்தவம், முஸ்லீம் என்ற வேறுபாடு இல்லாமல் எல்லா மக்களாலும் வணங்கி, மகிழ்ந்து கொண்டாடப்படும், ஓர் அற்புத இடம்தான் இருதயகுளம் தூய லூர்து அன்னைத் திருத்தலக் கெபி.

**திருத்தலம் உருவான வரலாறு :**

பிரான்சு நாட்டில் **அருட்திரு. கிராஞ்சு** அடிகளாரின் சகோதரிக்கு தூய லூர்து அன்னை வழியாக கிடைத்த நலன்களுக்கு நன்றியாக ஒரு கெபியை உருவாக்க வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில், **1915ம்** ஆண்டு இருதயகுளத்தில் பாறைக்காடாக இருந்த இடத்தை ஒரு திருயாத்திரைத் தளமாக உருவாக்கத் திட்டமிட்டார்.[11]

மதுரை மறைமாவட்டத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த **அருட்திரு.ஆங்கிலாடு** என்பவரின் அற்புதமான திட்டத்தாலும், அப்போது குருமாணவராகப் பயின்று கொண்டிருந்த **லெயோனார்டு** என்பவரின் உதவியாலும் பிரான்சு தேசத்தில் மசபியேல் மலைக் குகையில் இயற்கையாக அமையப்பெற்ற லூர்து அன்னைக் கெபி போன்று, இருதயகுளத்திலும், இயற்கையாக தத்ரூபமாகத் தூய லூர்து அன்னைக் கெபியை உருவாக்கினர்.[12] கெபிக்கு அழகு சேர்க்கும் விதத்தில் கெபியைச் சுற்றி பல மரங்களை வரிசையாக நட்டார். கெபிக்கு அருகிலேயே சிலுவைப் பாதைத் தலங்களையும் உயர்ந்த பாறையில் பெரிய பாடுபட்ட சுரூபத்தையும் அமைத்தார். இவ்வழியாய்ச் செல்லும்

---

[11] **அருட்சகோ. சேவியர் சே.ச.**, பார்ம் கவுஸ், இருதயகுளம் நாள்:20-12-1-2011

[12] திருவிழா அழைப்பிதழ் 2012

மக்களைத் தேவ அன்னையும், கல்வாரி நாதரும் அன்புடன் அழைத்த வண்ணம் அமைக்கப்பட்டது.

**லூர்து அன்னைக் கெபியின் சிறப்பு அம்சங்கள் :**

**1915ம்** ஆண்டு தூய லூர்து அன்னையின் திருத்தலக் கெபி உருவாக அயராது பாடுபட்ட குருமாணவர் **லெயோனார்டு** அன்னையின் பேரருளால் மதுரை உயர் மறை மாவட்டத்தின் ஆயராக உயர்த்தப்பட்டார். ஆயரான பின்னரும் பலமுறை இந்தத் திருத்தலத்திற்கு வருகை புரிந்து சிறப்புச் செய்தார். **1944ம்** ஆண்டு திருவிழாவிற்கு வருகைபுரிந்த **பேராயர் லெயோனார்டு** தூய லூர்து அன்னைக் கெபித் திருத்தலத்திற்கென்று சில சிறப்பு வரங்களை வழங்கினார். முதல் முறையாகத் திருப்பலியும், நற்கருணை ஆசீரும் அன்னையின் திருத்தல கெபியில் நிறைவேற்றப்பட்டது.[13]

புனித லூர்து அன்னையின் திருத்தலம் கிறிஸ்தவர் மட்டுமல்லாமல் பிற மதத்தினரும் போற்றி வழிபடும் இடமாக இருப்பது இதன் தனிச் சிறப்பாகும். பகல் இரவு என்றில்லாமல் எந்நேரமும் லூர்து அன்னையின் திருத்தலத்தில் மக்கள் ஜெபத்திலும், தியானத்திலும் ஈடுபட்டிருப்பதைக் காணலாம். காலை, மாலை வேளைகளிலும் தனியாகவும் குழுவாகவும் மக்கள் கூடி வந்து ஜெபமாலை ஜெபிக்கும் காட்சி நெஞ்சை உருக்கும் வண்ணம் உள்ளது. புனித லூர்தன்னை திருத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் அன்னை மரியாள் அனைவருக்கும் சுகத்தையும் அமைதியையும் அளவில்லாமல் அள்ளிக் கொடுக்கிறாள். வேலை வாய்ப்பு, குழந்தைப் பாக்கியம், நோயிலிருந்து

[13] பங்குத்தந்தையின் நாள் குறிப்பேடு (Parish Diary)

விடுதலை போன்ற புதுமைகள் கிடைக்கப்பெறுகிறது.[14] ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் மாலை 6.00 மணிக்கு ஜெப மாலையும் நவநாள் திருப்பலியும் குணமளிக்கும் நற்கருணை ஆராதனையும் நடைபெறுகிறது.

இருதயகுளம் பங்கு ஆன்மீகத்தில் பரந்து விரிந்து வளர்ந்து கொண்டிருந்தது. இருதயகுளம் மட்டுமல்லாது அதனைச் சுற்றியுள்ள கிராமங்களும் கிறிஸ்தவ மறையில் இணைக்க கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே சென்றது. இருதயகுளம் கிளைப்பங்குகள் உருவான வரலாறு மற்றும் அந்த மக்களின் மன மாற்றத்தின் பின்னனி, வாழ்க்கைமுறை, அந்த மக்களை மனந்திருப்பும் காலத்தில் மறைப் பணியாளர்கள் சந்தித்த இடையூறுகள் என்னென்ன என்பது பற்றி இந்த இயலில் விரிவாகக் காண்போம்.

**நாசரேத் பகுதியில் ஏற்பட்ட மனமாற்றம் :**

விக்கிரமசிங்கபுரம் நுழையும் பகுதியில் தாழ்த்தப்பட்ட மக்கள் வாழும் பகுதி இருக்கின்றது. இருதயகுளம் குருக்கள் இல்லத்தில் தோட்டி வேலை செய்த சூசையே முதலாவது திருமுழுக்குப் பெற்றவராகக் கருதப்படுகிறார். அவர் வழியாகச் சேரியிலுள்ள பிற மக்களும் திருமறையில் சேர்ந்ததாகக் கூறப்படுகிறது. தொடக்கக் காலத்தில் வேதத்தில் சேர்ந்தவர்களை விடப் பின்னர் மனந்திரும்பியவர்கள் கடவுளின் மீது விசுவாசமற்றவர்களாய் காணப்பட்டார்கள். திருமண உறவைப் பிற மதத்தாரிடம் வைத்துக் கொண்டதால் கடவுள் மீது பக்தி குறைந்ததாகக் கூறப்படுகிறது. அமைதியும், ஒழுக்கமும் காணப்படவில்லை. சண்டை, சச்சரவு, வாக்குவாதம், இழிவுச் சொற்களைக்

[14] நேர்காணல் - **திருமதி. அருளம்மை**, வயது 107, இருதயகுளம் நாள்: 19-01-2012

கூறுதல் அவர்களின் அன்றாட வாழ்வில் இடம் பெற்றதாகக் கூறப்படுகின்றது. திருமணம் முறைப்படி செய்யத் தொடங்கிய போது நிறைய பிரச்சனைகள் வந்ததாகக் கூறப்படுகின்றது. **சுவாமி லெமாய்** காலத்தில் இந்த மக்களிடம் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தி இருக்கிறார். அதன் பிறகு தான் சக்கிலியக்குடி பகுதி மக்களிடம் கடவுளின் மீது மிகுந்த விசவாசம், பக்தி, நம்பிக்கை ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.[15]

**சிவந்திபுரம் மக்களின் மனமாற்றம்**

கிறிஸ்தவ மறையில் உள்ளவர்களை எளிதாகக் கண்டுபிடிக்க வேண்டுமென்றால் அவர்களுடைய பெயரைக் கொண்டே கண்டறியலாம். மிக்கேல், சவேரியார், செபஸ்தியார், என்பது போன்ற புனிதர்களின் பெயரிலோ, இயேசு, மரியாள் போன்றவர்களின் பெயரிலோ, ஒரு தனிநபர் பெயரிட்டு அழைக்கப்பட்டால் அவர் கத்தோலிக்கக் கிறிஸ்தவர் என்று எளிதாக அடையாளம் காணலாம். ஆனால் சிவந்திபுரம் பகுதியில் வாழ்பவர்கள் இந்துக்களா?, பிரிவினைச் சபையைச் சார்ந்தவரா?, கத்தோலிக்கரா? என்று பிரித்துக் கூறுவது கடினம். சிவந்திபுரம் நடுவே பிரிவினைச் சயையாரின் கோவில் கோபுரம் அழகுற அமைந்து காணப்படுகின்றது. பெரும்பாலானோர் எந்த மதத்தையும் சாராதவர்களாகவே உள்ளனர். அவர்களுள் பலருடைய பெயரைக் கொண்டு அவர்கள் எந்த மதத்தைச் சார்ந்தவர்கள் என்று எளிதாயக் கண்டுணர முடியாது. அவர்களில் பலருடைய பெயர் கத்தோலிக்க சபையில் அல்லது பிரிவினைச் சபையில் ஞானஸ்நானப் பதிவேட்டில் பதிந்திருக்கும்.[16]

---

[15] நேர்காணல் - **திரு. அருளையா**, வயது 85, இருதயகுளம் நாள்: 23-01-2012

[16] நேர்காணல் - **அருட்திரு. முனைவர். ம. அருள் அம்புரோசு**, பங்குத்தந்தை, இருதயகுளம் நாள்: 10-12-2011

எடுத்துக்காட்டாக சிவந்திபுரத்தில் ராஜன் என்ற பெயர் கொண்ட சிறுவன் இருந்திருக்கிறான். ஆனால் அவன் எம்மதத்தைச் சேர்ந்தவன் என்பது தெரியவில்லை. அவனோடு பேசிக்கொண்டு குருவானவர் அந்த வீட்டிற்குச் சென்றிருக்கிறார். பெற்றோரிடம் பேசி பையனை புது நன்மை வாங்கத் தயாரிப்புச் செய்வோர் பட்டியலில் சேர்த்துக்கொண்டார். அவ்வாறு குருவானவர் பேசிக்கொண்டிருக்கும்போது அச்சிறுவனின் சகோதரி வெளியே வந்து குருவானவருக்கு வணக்கம் தெரிவித்தாள். அவள் பெயர் மீனாட்சி. குருவானவர் ஏன் இவளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கவில்லை என்று கேட்டார். கத்தோலிக்க மறையில் அவர்களது சாதியில் ஒரு வேளை மாப்பிள்ளை கிடைக்காது போகலாம். எனவேதான் அப்பெண்ணுக்கு இந்துப் பெயர் சூட்டியிருப்பதாகக் கூறினார். மேலும் குறைந்த வயதில் திருமணம் செய்து வைக்கும் பழக்கம் மக்களிடம் காணப்பட்டது. குருவானவர் அம்மக்களின் குற்றங்களைச் சுட்டிக் காட்டி மனம் மாறுவதை எடுத்துரைத்தார். அதே ஆண்டில் கிறிஸ்துமஸ் நாளன்று அப்பெண் திருமறையில் சேர்ந்தாள். அவளுடைய சகோதரனும் புது நன்மை வாங்கும் பேறுபெற்றான். பெற்றோரும் திருச்சபையில் சேர்ந்தனர். ஒரு குடும்பமே குருவானவர் மறையுரையைக் கேட்டு திருச்சபையில் சேர்ந்தது.[17]

**ஞானியார்தோப்பு :**

ஞானியார்தோப்பு பகுதியில் மக்கள் குடியேறியதற்கே ஒரு வரலாறு இருக்கிறது. இக்குடியிருப்பு மதுரை பஞ்சாலை அதிகாரிகளால் ஏற்படுத்தப்பட்டது. இங்குள்ள மக்களில் முதியவர்கள் **1929ல்** ஞானஸ்நானம் பெற்றவர்கள். ஞானஸ்நானம் பெற்றவர்களில் பெரும்பாலும் **நாடார்** இனத்தைச் சேர்ந்தவர்கள். ஒரு காலத்தில் இவர்கள் மதுரைப் பஞ்சாலை ஓரமாகக்

[17] நேர்காணல் - **திரு. அனிராஜ்,** வழக்கறிஞர், சிவந்திபுரம் நாள்: 11-02-2012

குடிசைகளில் வாழ்ந்து வந்தனர். பஞ்சாலையை விரிவுபடுத்த ஆசித்த போது, குடிசைகளில் வாழ்ந்த மக்கள் வேறு இடத்திற்குப் போகக் கேட்டுக் கொண்டனர். அக்குடிசைகள் நடுவே சிறிய ஜெபக் கூடம் அதில் புனித அந்தோணியார் சுரூபம் இருந்தது. கிறிஸ்தவ மக்கள் தம் பாதுகாவலரின் செபக் கூடத்தை விட்டுப் போக மனமின்றி இருந்தனர். செல்வாக்குள்ள பஞ்சாலை நிர்வாகிகள். அம்மக்கள் வாழ்ந்த பகுதியைத் தமதாக்கத் தீர்மானித்தனர். இறுதியாக இந்த ஏழை மக்களுக்கு ஓர் ஆலயமும், வசதியான வீடுகளும் கட்டித்தர உடன்பட்டனர். இவ்வாறு ஞானியார்தோப்பு உருவாயிற்று. இந்த ஞானியார்தோப்பு சிற்றாலயத்தில்தான் சிறுமியருக்கென ஒரு பள்ளியை முதலில் குருக்கள் தொடங்கினர். இப்பள்ளி நீண்ட காலமாக வளர்ச்சி பெறவில்லை. **சுவாமி குத்தூரியர்** காலத்தில் தான் அது மீண்டும் தலையெடுத்தது.[18] அங்கிருந்து தான் பிற்காலத்தில் அமலி மகளிர் பள்ளி உருப்பெற்றது. தற்போது இந்தப் பகுதி பெண்களின் கல்வி வளர்ச்சிக்கும், திறமைகளை வளர்த்தெடுக்கும் மிகச் சிறந்த பள்ளியாகச் செயல்பட்டு வருகின்றது. இது அமலவை கண்ணியர்களால் திறம்பட நிர்வகிக்கப்பட்டு வருகிறது.[19]

**ஜார்ஜ்புரம்**

விக்கிரமசிங்கபுரம் காவல் நிலையத்தின் வலதுபுறம் உள்ள பகுதி ஜார்ஜ்புரம் ஆகும். இப்பகுதியில் உள்ள மக்கள் தலித் மக்கள். இரண்டாவது உலகப்போரில் கலந்து கொண்ட இராணுவ வீரர் **திரு. ஜார்ஜ்** என்பவர் தனக்கும், இங்குள்ள தாழ்த்தப்பட்ட தலித் மக்களுக்கும் குடியிருக்க வீடு இல்லை என்று கலெக்டருக்கு மனுக் கொடுத்தார். கலெக்டரை நேரடியாகப் பார்வையிட்டு 8 ஏக்கர் 64 செண்ட் இடத்தை ஏறக்குறைய 25 தலித்

---

[18] நேர்காணல் - **திரு. அல்போன்ஸ்**, வின்சென்ட் தே பவுல் சபை உறுப்பினர், இருதயகுளம் நாள்: 15-01-2012

[19] நேர்காணல் - **அருட்சகோ. இருதயமேரி CIC.,** அமலி இல்லம், இருதயகுளம் நாள்:23-12-2011

குடும்பங்கள் ஒன்று சேர்ந்து குடியிருக்க இந்த இடத்தை அரசு வழங்கியது. திரு.ஜார்ஜ் என்பவர் இந்த இடத்திற்கு முயற்சி செய்ததால் இராணுவவீரர் அவரின் ஞாபகமாக இந்தப்பகுதி இன்றும் **"ஜார்ஜ்புரம்"** என அழைக்கப்படுகிறது. இங்கு மக்களுக்கு பிரித்துக் கொடுத்த இடம் போக சில பகுதிகளை **திரு. ஜார்ஜ்** என்பவர் தன் கைவசம் வைத்திருந்தார். அப்படி தன்னிடம் இருந்த இடத்தின் ஒரு சிறுபகுதியை நன்கொடையாகக் கொடுத்த இடத்தில் தான் இன்று இருக்கின்ற ஆலயமும் கட்டப்பட்டுள்ளது. இந்த ஆலயம் தந்தை சந்தியாகு அடிகளாரின் பணிக்காலத்தில் கட்டப்பட்டுள்ளது.[20] திரு இருதய சகோதரர்களின் பெருமுயற்சியாலும் மக்களின் உதவியாலும் கட்டப்பட்டது. இந்த கிராமமே திரு இருதய சகோதரர்களால் உருவான கிராமம் என்று கூறுகிறார்கள். இன்றும் திருஇருதய சகோதரர்கள் இந்தக் கிராமத்தை தங்களுடைய தத்துக்கிராமம் என்று அழைக்கிறார்கள்.[21]

**மூன்றுவிளக்கு**

பிரிட்டிஸ் ஆட்சியின் காலத்திலேயே இந்த இடம் மூன்றுவிளக்கு என்று அழைக்கப்படுகிறது. காரணம் பாபநாசம் மெயின் ரோட்டில் தெரு விளக்காக 3 விளக்கை அன்றே அமைத்துள்ளார்கள். அது இன்று அப்படியே உள்ளது, ஆனால் செயல்படாத நிலையில் உள்ளது. அந்த விளக்கைக் கொண்டே இந்தப்பகுதி மூன்றுலேம்ப் என அழைக்கப்படுகின்றது. விக்கிரமசிங்கபுரம் ஊர் நடுவே உள்ள இந்த மூன்றுலேம்பில் புனித சூசையப்பர் ஆலயம் உள்ளது. இங்கு இடம் பெற்றிருந்த பழைய ஆலயம் **தந்தை குத்தூரியர்** காலத்தில் கட்டப்பட்டதாகக் கூறப்படுகின்றது. ஒரு சில குடும்பத்தார்களால் **தந்தை இருதயம் இஞ்ஞாசி** காலத்தில் அந்த பழைய ஆலயம் புதுப்பிக்கப்பட்டதாக

---

[20] சகாயஅன்னை ஆலய கல்வெட்டு, ஜார்ஜ்புரம்

[21] நேர்காணல் - **அருட்சகோ. சேசுராஜ் தி.இ.ச.**, திருஇருதய இல்லத் தலைவர், இருதயகுளம் நாள்: 21-12-2011

கூறப்படுகின்றது. அந்தப் பழைய ஆலயத்தையொட்டி ஒரு பள்ளியையும், **தந்தை குத்தூரியர்** ஏற்படுத்தினார். அதனை பெண்களின் பள்ளியாக மாற்றினார். **தந்தை குத்தூரியர்** அவர்களே இந்தப் பள்ளியையும் அந்த இடத்தையும் அமலவைக் கன்னியர்களிடம் ஒப்படைத்தார்.[22] அதுவே இன்று தெரசாள் நடுநிலைப்பள்ளியாக உயர்ந்துநிற்கிறது.

**புலவன்பட்டி**

விக்கிரமசிங்கபுரத்தின் தெற்குப் பகுதியில் தாமிரபரணி ஆற்றுக்கும், கால்வாய்க்கும் இடைப்பட்ட பகுதி தான் புலவன்பட்டி என்ற கிராமம். புலவன்பட்டியில் C.S.I கிறிஸ்தவர்கள்தான் அதிகமாக உள்ளனர். ஏறக்குறைய 500 C.S.I குடும்பங்கள் உள்ளன. புலவன்பட்டியில் 43 கத்தோலிக்க குடும்பங்கள் உள்ளது. பல ஆண்டுகளாக ஆலயம் இல்லையே என்று ஏங்கிய மக்களுக்கு **1994ம்** ஆண்டு பங்குத் தந்தையாக பணியாற்றிய **அருட்திரு அருளப்பன் அடிகளார்** ஒரு புதிய ஆலயத்தைக் கட்டித் தந்தார். இந்த ஆலயம் நமது முன்னாள் ஆயர் **மேதகு. இருதயராஜ்** அவர்களால் **29.1.1994** அன்று அர்ச்சித்து திறந்து வைக்கப்பட்டது.[23] இந்த ஆலயமானது திருவாடுதுறை ஆதீனத்துக்கு பாத்தியப்பட்ட, காலம் சென்ற திரு.தேவசகாயம் அவர்களால் நன்கொடையாகக் கொடுக்கப்பட்ட இடத்தில் கட்டப்பட்டுள்ளது.

**இராமலிங்கபுரம்**

திரு. இராமலிங்கம் என்பவர் மதுரை பஞ்சாலைக்கு அருகில் குடியிருந்தபொழுது அவரது சொந்த நிலம் பஞ்சாலைக்குத் தேவைப்பட்டதால் பஞ்சாலை நிர்வாகம் பல நெருக்கடிகளைக் கொடுத்து அவரது இடத்தைக் கேட்டது. ஆனால் அவர் சம்மதிக்காத நிலையில் பஞ்சாலை நிறுவனம் 2 ½

---

[22] நேர்காணல் - **அருட்சகோ. அப்போலின் CIC**., அமலி இல்லம், இருதயகுளம் நாள்: 28-12-2011

[23] புனித குழந்தை திரேசாள் ஆலய கல்வெட்டு, புலவன்பட்டி (29-01-1994)

ஏக்கர் 40 செண்ட் இடத்தை இவருக்கு மாற்று இடத்தில் வழங்கிவிட்டு இவரது பூர்வீக இடத்தைப் பஞ்சாலைக்குப் பெற்றுக் கொண்டது. இவரது பெயருக்கு 2 ½ ஏக்கர் 40 செண்ட பத்திரம் போட்டதன்பெயரில் தான் இந்த இடத்திற்கு இராமலிங்கபுரம் என அழைக்கப்பட்டது. பஞ்சாலை நிறுவனத்திடம் ஞானியார் தோப்புக்கு ஆலயம் கட்டிக்கொடுத்தது போல இராமலிங்கபுரத்திற்கும் ஆலயம் கட்டித்தர வேண்டும் என்று வேண்டுகோள் விடப்பட்டது. திரு. இராமலிங்கம் தனக்கு என்று வைத்திருந்த 40 செண்ட்டில் ஒரு ஆலயத்தை அவருடைய சொந்தச் செலவில் கட்டினார். அது தான் இன்று இருக்கும் சவேரியார் ஆலயம். அவருடைய சொந்த இடத்தில் கட்டப்பட்ட ஆலயம். ஆலயம் கட்டுவதற்கு முன்பே இந்த இராமலிங்கம் என்ற இவர் ஒரு கத்தோலிக்க கிறிஸ்தவனாக ஞானஸ்நானம் பெற்று 'தேவசகாயம்' எனப் பெயர் மாற்றிக் கொண்டார்.[24] இங்கு 64 கத்தோலிக்க குடும்பம் தற்போது உள்ளது. இந்த ஆலயம் தநதை **M.அருள்** காலத்தில் தான் **19.2.1985ல்** தேவசகாய நாடாரின் மூத்த வாரிசான மிக்கேல் நாடார் என்பவரால் தன்னிச்சையாகப் பாளை மறைமாவட்டத்திற்கு எழுதிக் கொடுக்கப்பட்டது.

### இருதயகுளம் மறைபணித்தளத்தைச் சார்ந்த ஆலயங்கள்

1. இருதயகுளம் - திருஇருதய ஆலயம்
2. ஆறுமுகம்பட்டி - புனித அந்தோணியார் ஆலயம்
3. சிவந்திபுரம் - புனித மிக்கேல் அதிதூதர் ஆலயம்
4. புலவன்பட்டி - புனித குழந்தை திரேசா ஆலயம்
5. ஞானியார்தோப்பு - புனித அந்தோணியார் ஆலயம்
6. ஜார்ஜ்புரம் - புனித சகாய அன்னை ஆலயம்

[24] நேர்காணல் - **திரு. டேவிட்ராஜ்,** உபதேசியார், இருதயகுளம் நாள்: 30-12-2011

7. நாசரேத் - புனித திருக்குடும்ப ஆலயம்
8. இராமலிங்கபுரம் - புனித சவேரியார் ஆலயம்
9. மூன்று விளக்கு - புனித வளனார் ஆலயம்
10. அகஸ்தியர்பட்டி - புனித ஆரோபண மாதா ஆலயம்

'நமது தேசம் எத்தனையோ துறைகளில் முன்னேறினாலும் இன்னும் கோடிக் கணக்கான மக்கள் சரியான வாழ்க்கைக் கல்வி இன்றி வாழ்க்கையில் வழுக்கி வீழ்ந்தவர்களாகத் தத்தளித்துக் கொண்டிருக்கின்றார்கள். நமது கல்விப் பணி செல்வந்தவர்களின் பிள்ளைகளுக்கும், அறிவில் சிறந்த பிள்ளைகளுக்கும் என்று குறுகிய வட்டத்தில் சுருங்கிவிடாமல் எல்லாத் தரப்பினருக்கும், குறிப்பாக ஒடுக்கப்பட்டோருக்கும், ஒதுக்கப்பட்டோருக்கும் நமது கல்விப் பணியானது சென்றடைய வேண்டும் என்பதை உணர்ந்தவர்களாய் இருதயகுளம் பங்கிலும் அருட்பணியாளர்கள் மற்றும் அருட்சகோதரிகள் கல்விப் பணிக்கு அதிகமுக்கியத்துவம் கொடுத்தனர்.

**கல்வியின் முக்கியத்துவம்**

மேய்ப்புப் பணி என்பது பெரும்பாலும் இறைவாக்குகளை மையப்படுத்திய பணி என்று கூறுபவர் பலருள்ளனர். திருப்பணியில் கல்விச் சூழல் தொடக்கத்திலிருந்து வந்துள்ளதையும் அதனுடைய முக்கியத்துவத்தையும் திருமறை வாக்கியங்கள் வலியுறுத்துகின்றன. "கல்வி என்பது 'கல்' எனும் பகுதியும் 'வி' எனும் விகுதியும் பெற்ற தொழிற்பெயராகும். இத்தொழிற்பெயருக்கு 'தோண்டுதல்' என்பது பொருள். இலத்தின் சொல்லான 'educare' எடுகோ் மறைந்தும் மேலோங்கியிருப்பவற்றை வெளியே கொணர்தல் என பொருள்படும்.

ஒருவரிடத்தில் உள்ள அனைத்து ஆற்றலையும், திறமைகளையும் அறிந்து அதனை வெளியுலகிற்கு அடையாளமிட்டுக் காட்டுவதே கல்வியாகும்."[25]

இன்றைய நவீன உலகில் மேய்ப்புப் பணியை பல்வேறு தளங்களில் ஆற்ற வாய்ப்பிருக்கிறது. கல்வி புகட்டுகின்ற பணியும் ஒரு சிறந்த மேய்ப்புப் பணியாகும். இக்கல்விப் பணியில் பொறுப்புணர்ச்சி, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, நீதி, நேர்மை, தூய்மை ஆகிய பண்பு நலன்களை நமதாக்கிக் கொண்டு இப்பணிபுரிய வேண்டும். இக்கல்விப் பணியில் எந்தச் சூழல்களிலும் தனக்குக் கீழ் வேலை பார்த்து வரும் சக ஆசிரியர்களையோ அல்லது படித்து வரும் மாணவர்களையோ மற்றும் வேலையாட்களையோ அடிமை முறையில் நடத்தக் கூடாது. ஆசிரியர் என்பவர்கள் வழி நடத்த வேண்டும், வழிகாட்ட வேண்டும்.[26]

கல்விப் பணி என்பது வெறும் பாடத்தை மட்டும் புகட்டி விடுவதல்ல. மாறாக கிறிஸ்தவக் கல்விப் பணியில் புதுமை, கற்பதில் இனிமை, கற்பதால் கற்பனை அறிவு வளர்ச்சி உள்ள பொருத்தமான கல்வியைத் தர பாடுபட வேண்டும். நமது சமுதாயத்தில் இன்னும் அளப்பெரிய மாற்றம் ஏற்படும் வகையில் விழிப்புணர்ச்சியும், ஒருமைப்பாடு, சமூக ஒற்றுமை, பிறரை மதித்தல், பிறரது உணர்வுகளை புரிந்து கொள்ளக்கூடிய ஆளுமை வளர்ச்சிக் கல்வியும் இன்றைய காலத்தின் கட்டாயமாகத் தோன்றுகிறது. ஒழுக்கத்தை, அன்பை, இரக்கத்தை, பிறரை சமமாக பாவிக்கும் பண்பை வளர்ப்பதற்கு கல்வி உதவ வேண்டும். வேலைக்கான கூலியாக கல்வி அமைந்துவிடாமல், வாழ்க்கைக்கான கல்வியாக, சமுதாய ஒட்டு மொத்த வளர்ச்சிக்கு அடித்தளமாக அமையும் உயர்ந்த கல்வியாக அமைய வேண்டும். இதனால் ஒரு தனி மனிதனின்

---

[25] டேவிட். C.R.W., *திருப்பணியில் கல்விச்சூழல்*, டேவிட் C.R.W., **"கிறிஸ்தவ திருப்பயனியர்"**, (மதுரை: தமிழ் இறையியல் நூலோர் குழு,1992),178.

[26] Douglas J. Morin, ***Instrument of Peace – Personal and spiritual goal of the priest***, (Newyork: Alba House, 1989), 83.

உள்ளம் யாவும் ஒருங்கிணைந்த வளர்ச்சியடைய உதவும் ஓர் ஏணிப் படியாக அமைய கல்விப் பணியை நாம் ஒவ்வொருவரும் நாம் வாழுகின்ற இடத்தில் முன்னெடுக்க வேண்டும்.[27]

**அமலவைக்கன்னியரின் பணி தொடக்கம்:**

திருஇருதய கோவிலை மையமாக வைத்து பெயர் பெற்ற இவ்வூரில் **1941 ஆம்** ஆண்டு மதுரை **அமலவைக்கன்னியர்** தம் கால் தடம் பதித்தனர். மூன்று சகோதரிகள் இறைமகன் இயேசுவின் நற்செய்திப் பணிகளை ஆர்வத்தோடு தொடங்கினர். இப்பகுதிவாழ் மக்களின் தேவையை உணர்ந்த அவர்கள் கல்வி நிலையங்களை ஏற்படுத்தினர்.

**புனித தெரசாள் நடுநிலைப்பள்ளி :**

இருதயகுளம் பகுதிவாழ் மக்களின் தேவையை உணர்ந்த அருட்சகோதரிகள், அவர்களின் தேவையை பூர்த்தி செய்யும் எண்ணத்தோடு **02.01.1942 ம் ஆண்டு** புனித சூசையப்பர் ஆலய வளாகத்தில் இரண்டு சகோதரிகளையும், 40 மாணவிகளையும் கொண்டு **புனித தெரசாள் நடுநிலைப்பள்ளி** என்ற பெயருடன் கல்விப் பணியை ஆரம்பித்தனர். 70 ஆண்டுகளாக சிறப்புடன் விளங்கும் புனித தெரசாள் நடுநிலைப்பள்ளியில் இன்று 2 ஆசிரிய அருட்சகோதரிகளும் 21 ஆசிரியைகளும் பணியாற்றுகின்றனர். 664 மாணவ மாணிவியர் கல்வி பயில்கின்றனர்.[28]

**புனித சேவியர் நடுநிலைப்பள்ளி**

**1944ம் ஆண்டு** புனித சேவியர் நடுநிலைப் பள்ளி தொடங்கப்பட்டது. ஆசிரிய அருட்சகோதரிகளும் 21 ஆசிரியைகளும் பணியாற்றுகின்றனர். 775 மாணவ மாணவியர் கல்வி பயில்கின்றனர்.

---

[27] Douglas J. Morin, ***Instrument of Peace – Personal and spiritual goal of the pri***est, (Newyork: Alba House, 1989),84.

[28] நேர்காணல் - **அருட்சகோ. பிலோ CIC,** தலைமை ஆசிரியை, புனிததெரசாள் நடுநிலைப்பள்ளி, விக்கிரமசிங்கபுரம், நாள்: 24-12-2011

**அமலி மகளிர் மேல்நிலைப் பள்ளி :**

தொடக்க கல்வி மட்டும் பெற்றால் ஒரு குடும்பம் முன்னேற முடியாது. பெண்களும் படிக்க வேண்டும் பட்டங்கள் பல பெற்ற பாரினை ஆளவேண்டும் என்ற உயர்ந்த நோக்குடன் 1955ம் ஆண்டு அமலி மகளிர் உயர்நிலைப் பள்ளி தொடங்கப்பட்டது. 1979 – 80 ம்ஆண்டு மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தப்பட்டது. மேல்நிலை வகுப்புகளில் தொழில் பிரிவு பாடங்களும், கற்றுத் தரப்படுகிறது. 6 முதல் 12 வகுப்புகளில் ஒவ்வொரு பிரிவில் ஆங்கில வழிக் கல்வியும் அளிக்கப்படுகிறது. தற்போது 8 ஆசிரிய அருட்சகோதரிகளும் 44 ஆசிரியைகளும் பணியாற்றுகின்றனர். 9 அலுவலகப் பணியாளர்களும் பணியாற்றுகின்றனர். 2000 மாணவிகள் கல்வி பயில்கின்றனர். இம்மூன்று பள்ளிகளிலும் மாணவியர் ஒருங்கிணைந்த வளர்ச்சி பெற்ற கல்வியில் மட்டுமல்ல கலைத் திறமைகளிலும் மாணவ, மாணவியர் சிறப்புப் பயிற்சி பெறுகின்றனர். பரத நாட்டியம், கராத்தே போன்ற கலைகளும் கற்றத் தரப்படுகிறது. அமலி மகளிர் மேல்நிலைப்பள்ளியில் வகுப்பு நேரம் அல்லாத நேரங்களில் கணிப்பொறியியல், வகுப்புகள், நடைபெறுகிறது. மறைக்கல்வி நல்லொழுக்கம் கருத்தரங்குகள், தியானங்கள் போன்றவை மூலம் அவர்களின் ஆன்ம வாழ்வு வளம் பெறவும், நற்பண்புகள் வளரவும் வாய்ப்பளிக்கப்படுகிறது.[29]

பொருளாதாரத்தில் சமூகத்தில் பின்தங்கிய குடும்பங்களில் உள்ள பெண் குழந்தைகள் குறிப்பாக மலைவாழ் பகுதி கடற்கரை பகுதியில் வாழும் பெண் குழந்தைகள் தங்கிப் பயில புனித வளனார் கருணை இல்லம் ஒன்றும் நடுத்தர குடும்பத்தைச் சார்ந்த மாணவியர்கள் தங்கிப் பயில அமலி விடுதி ஒன்றும் செயல்பட்டு வருகிறது.

---

[29] நேர்காணல்- **அருட்சகோ. இருதயமேரி CIC.,** அமலி இல்லம், இருதயகுளம் நாள்:23-12-2011

இப்பள்ளியில் பயின்ற மாணவியரில்பலா் மருத்துவா்களாகவும், வழக்கறிஞா்களாகவும், சிறந்த ஆசிரியா்களாகவும் சமூக சேவைகிளாகவும் பல்வேறு துறவற சபையில் துறவிகளாகவும் உயா்ந்து நிற்கின்றனா்.

**அருட்சகோதரிகளின் பணிகள் :**

அமலி இல்லத்தில் 30 சகோதரிகள் ஒன்று கூடி எளிமை அன்பு வழியில் எளியோா்க்கு நற்செய்தி அறிவித்தல் போன்ற சபையின் நோக்கத்தை அவா்களின் பணிவாழ்வு வழியாக அருட்சகோதரிகள் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறாா்கள். திருச்சபையின் வளா்ச்சியில் அக்கறை கொண்டவா்களாய் தலத் தலைவரோடு இணைத்து இறைபணியைச் செய்வதில் முழு ஈடுபாடு காட்டுகிறாா்கள். திருவருட்சாதனங்களைப் பெறுவதற்கு மக்களைத் தயாரிக்கின்றனா். பங்குத் தலங்களில் திருப்பலிக்கு மக்களைத் தயாரித்தல் வீடுகளைத் தயாரித்தல், ஞாயிறு மறைக்கல்வி கற்றுக் கொடுத்தல் முறைசாரா திருமணங்களை ஒழுங்குபடுத்துதல், வழிபாடு நடத்துதல், கோவில் பீட அலங்கரிப்பு, கோவில் பராமரிப்பு, பாடல் குழு போன்ற பணிகளில் ஈடுபடுகின்றனா். சிறுவா், சிறுமியா்களை புதுநன்மை, உறுதி பூசுதலுக்குத் தயாரித்தல் போன்ற பங்குப் பணியிலும் ஈடுபடுகின்றனா்.[30]

**அருட்சகோதரா்களின் பணிகள் :**

அருட்சகோதரா்கள் அவ்வப்போது பங்குத் தந்தையோடு இணைந்து அரும்பணியாற்றி வருகின்றாா்கள். ஆலய வழிபாட்டு நிகழ்ச்சிகளில் பங்கெடுத்து ஆன்மீக சேவையாற்றி வருகிறாா்கள். உடல் நலக்குறைவால் அவதியுறும் பலருக்கு ஜெபம் செய்து ஆண்டவரின் திருவிருந்தைக் கொடுத்து ஆன்ம சரீர ஊக்கம் பெற்றுக் கொள்ளச் செய்கிறாா்கள். ஏழை, எளியவா்களுக்கு நிதியுதவி

[30] நோ்காணல் - **அருட்சகோ. அப்போலின் CIC**., அமலி இல்லம், இருதயகுளம் நாள்: 28-12-2011

அளித்து அவர்களைக் காத்து வருகின்றார்கள். திருஇருதயசபை அருட்சகோதரர்கள் மிகுந்த ஆர்வமுடன் திறம்பட நற்சேவையாற்றி இயேசுவின் திரு இருதய பக்தியைப் பரப்பும் சாட்சிகளாய் இருந்து வருகிறார்கள்.

**திருஇருதய உயர்நிலைப்பள்ளி :**

**1919ம் ஆண்டு** திருஇருதய உயர்நிலைப் பள்ளியானது திருஇருதய சகோதரர்களால் ஏற்படுத்தப்பட்டது. திருஇருதய சகோதரர்கள் கல்வி பயிற்றுவித்து வருகின்றார்கள். இப்பள்ளியில் 25 ஆசிரியப் பெருமக்கள் கற்பித்தலில் ஈடுபடுகின்றனர். திரு இருதய அருட்சகோதரர்களின் வழிநடத்துதலின் கீழ் செயல்படுகிறது. பள்ளியின் நிர்வாகமும், தலைமை ஆசிரியராகவும் அருட்சகோதரர்கள் இருந்து இப்பள்ளியை வழி நடத்துகின்றனர்.

**திருக்குடும்ப கருணை இல்லம் :**

**1975 ஆம் ஆண்டிலிருந்து** சமூக நலத்துறை மூலம் மானியம் பெறப்பட்டு இந்த இல்லம் செயல்படுகிறது. இவ்விடுதியில் 360 மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர். இவ்வில்லத்தில் மாணவர்களின் அடிப்படைத் தேவைகள், மற்றும் பிற தேவைகளும் நிறைவேற்றப்படுகிறது. விடுதியின் முதன்மைக் காப்பாளராக அருட்சகோதரர்கள் செயல்பட்டு வருகின்றார்கள். இவ்விடுதியில் விடுதிக் காப்பாளராக 12 பேர் பணியாற்றி வருகின்றார்கள்.

## இருதயகுளம் பங்கு மக்களின் ஒருங்கிணைந்த செயல்பாடுகள்

**“இறைமக்களின் திருக்கூட்டமே திருச்சபை”** என்பது திருமுழுக்குப் பெற்ற ஒவ்வொருவரும் விசுவசித்து ஏற்றுக் கொள்ள வேண்டிய ஒரு பேருண்மை. இவர்களுக்குப் பணி புரிந்து வழிநடத்திச் செல்ல அவர்களிடமிருந்தே கிறிஸ்துவால் தேர்ந்தெடுக்கப்பட்டு திருநிலைப்படுத்தப் பெற்றவர்கள்தான் அருட்பணியாளர்கள், அர்ப்பண வாழ்வை மேற்கொள்ளும் துறவியர். இம் முப்பிரிவையும் உள்ளடக்கியதே திருச்சபை.

ஒவ்வொரு பிரிவினரும் அவரவர்க்கு இறைவன் அருளும் அழைத்தலைப் பெற்று அதனடிப்படையில் தங்களின் நிலையையும் பணியையும் ஏற்க வேண்டும். மேலும் திருச்சபையின் வளர்சியில் தன் பங்கை ஆற்றாத எந்த உறுப்பும் திருச்சபைக்கும் தனக்குமே பயனற்றது என்று கூறப்பட வேண்டும். இருதயகுளம் பங்கின் வளர்ச்சியில் அருட்பணியாளர்கள், துறவியர் அவர்களோடு இணைந்து இறைமக்களும் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றார்கள்.

**அன்பியங்களின் செயல்பாடுகள்**

அன்பியம் என்பது ஓர் அடித்தளத் திருச்சபையாகும். மக்களை மையப்படுத்தி மக்களாகவே எளிய சூழலில் இல்லங்களில் ஒன்று கூடுவதாகும். காரணம் அன்று திருச்சபையின் வாழ்வும் பணியும் ஓர் இல்லத்தில்தான் உருவெடுத்தது. பங்கிலுள்ள அனைவரும் ஒருவரையொருவர் தனிப்பட்ட விதத்தில் அறிந்து கொண்டு, அவர்களோடு சுமூகமான உறவை ஏற்படுத்துவதற்கு ஏதுவாக அமைகிறது. இங்கு நெருக்கமான உரையாடலும் உறவாடலும் ஏற்படுவதற்கு வாய்ப்பாக அமைகிறது. எப்படி ஒரு குடும்பத்தில் கணவன் மனைவி, பெற்றோர் பிள்ளைகள் ஒருவரோடு ஒருவர் எதார்த்தமாக உரையாடி, அன்பைப் பகிர்ந்து, ஒருவர் ஒருவரை முழுமையாகப் புரிந்து கொண்டு நிறை குறைகளை ஏற்றுக் கொள்ளுகின்ற மனப்பக்குவம் அன்பியத்திலும் இளையோடிக் கிடப்பதைக் காண முடிகிறது.

இருதயகுளம் பங்கின் வளர்ச்சியில் அன்பியங்களின் கூட்டுச்செயல்பாடு மிகவும் அத்தியாவசியமானதாகவும் அடிப்படையாகவும் அமைந்திருக்கின்றது. இருதயகுளம் பங்கில் மொத்தம் 29 அன்பியங்கள் செயல்பட்டுவருகின்றது. இவைகள் 6 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு அருட்சகோதரர்கள் மற்றும் அருட்சகோதரிகளின் வழிநடத்துதலில் இயங்கிவருகின்றது. ஞாயிறு வழிபாடுகளைச் சிறப்பித்தல், திருவிழா நிகழ்வுகளைச் சிறப்புச் செய்தல்,

அன்பியக் கையேடுகளை நிர்வகித்தல், பங்குத்தந்தையர்களுக்குத் தங்களாளான உதவிகளைச் செய்தல் போன்ற பங்குப் பொறுப்புக்களைப் பகிர்ந்துகொள்கின்றனர். திருமணம், நற்கருணை, உறுதிபூசுதல் அருட்சாதனங்களின்போது தங்களின் அன்பிய உறுப்பினர்களுக்குத் துணையாகவும் அவர்களைச் சரியான விதத்தில் தயார் செய்வதிலும் அன்பியப் பொறுப்பாளர்களின் பணி பாராட்டுதற்குரியது. காணிக்கைகளை எண்ணுவதிலும், அருட்திரு. கிராஞ்சு அடிகளாரின் புனிதப்பொருட்கள் அங்காடியை நிர்வகிப்பதிலும் பங்குத்தந்தைக்கு உதவியாக இருக்கின்றனர். இதுபோன்று இன்னும் பல பங்குச்செயல்பாடுகளை மிகுந்த ஈடுபாட்டுடன் செய்துவருகின்றனர்.[31]

**அன்பிய மண்டலங்களின் பொறுப்பாளர்கள்**[32]

| **1. இருதயகுளம் - திருஇருதய ஆலயம்**<br>**பனிமய மாதா மண்டலம் சுகாலயம் அருட்சகோதரர்கள்** | | | | |
|---|---|---|---|---|
| 01. | இதயா | | | |
| 02. | அன்னை | | | |
| 03. | கௌசானல் | | | |
| 04. | வியான்னி | | | |
| **அமலோற்பவ அன்னை மண்டலம் சகோதரி. இருதயமேரி சகோ.அமலியா** | | | | |
| 05. | பவுல் | | | |
| 06. | பாத்திமா | | | |
| 07. | இனிகோ | | | |
| **அடைக்கல அன்னை மண்டலம். சகோ.அருள் மேரி சகோ.மார்சல்** | | | | |

[31] நேர்காணல் - **செல்வி. அற்புதமேரி**, கௌசானல் அன்பிய உறுப்பினர், இருதயகுளம் நாள்:04-01-2012

| | | | |
|---|---|---|---|
| | | | |
| 08. தோமா | | | |
| 09. லெமாய் | | | |
| 10. லூர்து | | | |
| கார்மேல் அன்னை மண்டலம் சகோ.பிலோ சகோ.சகாயம் | | | |
| 11. அமலி | | | |
| 12. ஆபிரகாம் | | | |
| 13. ஈசாக் | | | |
| விண்ணரசி மண்டலம். சகோ. ரோஸ்லின்<br>**2.** ஆறுமுகம்பட்டி - புனித அந்தோணியார் ஆலயம் | | | |
| 14. அல்போன்சா | | | |
| 15. விண்ணரசி | | | |
| தூதர் மண்டலம் சகோ. அப்போலின்<br>**3.** சிவந்திபுரம் - புனித மிக்கேல் அதிதூதர் ஆலயம் | | | |
| 16. மிக்கேல் | | | |
| 17. இரபேல் | | | |
| 18. கபிரியேல் | | | |
| சகாய அன்னை மண்டலம்<br>**4.** புலவன்பட்டி – புனித குழந்தைதிரேசா ஆலயம் | | | |
| 19. சிறுமலர் | | | |
| **5.** ஞானியார்தோப்பு – புனித அந்தோணியார் ஆலயம் | | | |
| 20. அந்தோணியார் | | | |
| **6.** ஜார்ஜ்புரம் - புனித சகாய அன்னை ஆலயம் | | | |
| 21. சகாய அன்னை | | | |
| **7.** நாசரேத் - புனித திருக்குடும்ப ஆலயம் | | | |
| 22. திருக்குடும்பம் | | | |
| **8.** இராமலிங்கபுரம் - புனித சவேரியார் ஆலயம் | | | |
| 23. அன்னை திரேசா | | | |
| 24. சவேரியார் | | | |
| 25. பேதுரு | | | |
| **9.** மூன்று விளக்கு - புனித வளனார் ஆலயம் | | | |
| 26. யாக்கோபு | | | |
| 27. வளனார் | | | |
| | | | |

4.2

| 10. அகஸ்தியர் பட்டி - புனித ஆரோபண மாதா ஆலயம் | | | |
|---|---|---|---|
| 28. ஆரோபண மாதா | | | |
| 29. குழந்தை இயேசு | | | |

**நற்செய்திப் பணி:**

திருச்சபையின் வாழ்லும் பணியிலும் ஈடுபட அதன் ஒவ்வொரு உறுப்பினருக்கும் தூய ஆவி தம் அருங்கொடைகளாகப் பல தனி ஆற்றல்களையும் திறமைகளையும் தந்துள்ளார். அத்தகைய அருங்கொடை ஆற்றல்களை இனம் கண்டு அவர்களுக்கு ஏற்ற பணிகளில் அவர்களை ஈடுபடுத்த வேண்டும்.[33]இறைமகன் இயேசுவின் வார்த்தைகளை மக்கள் மனதில் விதைக்கவேண்டிய கடமையும் பொறுப்பும் இறைமக்களைச் சார்ந்தது என்பதை உணர்ந்தவர்களாய் நற்செய்தி அறிவிப்புப் பணியில் இருதயகுளம் பங்கு உறுப்பினர்கள் வீரியமுடன் செயல்படுகின்றனர். திருவிழா மற்றும் முக்கியமான வழிபாட்டுக் காலங்களில் குறிப்பாக ஈஸ்டர், கிறிஸ்மஸ் நேரங்களில் தியானம், நற்செய்திப்பெருவிழாக்கள், விவிலியப்போட்டிகள் போன்றவைகள் ஏற்பாடு செய்யப்பட்டு மக்களை ஆன்மீகத்தில் வளர்வதற்கு துணைசெய்கின்றனர். மறைபரப்பு ஞாயிறு மற்றும் விவிலிய வாரம் என்று சிறப்பாக விவிலியத்தையும் கிறித்தவ படிப்பினைகளையும் முன்னிறுத்திய விழாக்களை ஏற்படுத்தி மக்களை கிறித்தவபடிப்பினைகளில் தெளிவையும் ஆர்வத்தையும் ஏற்படுத்தும் விதமாக தயாரித்து நடத்துகின்றனர். ஒவ்வொரு மாதத்தின் கடைசி வெள்ளிக்கிழமையன்று நம்பிக்கையின் முழு இரவுச்செபம் மறைமாவட்ட நற்செய்தி அறிவிப்புப் பணிக்குழுவால் செயல்படுத்தப்படுகின்றது. இதில் அனைத்து இறைமக்களும் ஆர்வத்துடனும் ஈடுபாட்டுடனும் கலந்து கொண்டு பயன்பெறுகின்றனர்.[34]

---

[33] ஆயர். செ.சூசைமாணிக்கம், *பொதுநிலையினரே இது உங்கள் நேரம்,* (திண்டுக்கல்: வைகறை பதிப்பகம், 2007), 56 – 58.

[34] நேர்காணல் - **திரு. அலெக்ஸ் டோம்னிக்**, திருவழிபாட்டுக்குழு, இருதயகுளம் நாள்: 10-01-2012

**குடும்பங்களுக்கான பணி:**

குட்டித் திருச்சபை என்றழைக்கப்படும் குடும்பங்களை, நல்ல கிறிஸ்தவ மதிப்பீடுகளில் வாழும், பயிற்றுவிக்கும் குடும்பங்களாக கட்டி எழுப்ப வேண்டியுள்ளது. ஏனெனில் பொருளாதாரம், அரசியல், பண்பாடு, உலகமயமாக்குதல், தொடர்பு சாதனங்கள், நுகர்வு கலாச்சாரம், தனி மனித கலாச்சாரம் ஆகியவை குடும்ப வாழ்வின் வழக்கமான மதிப்பீடுகளை அதிகம் பாதிக்கின்றன. இதனால் பல குடும்பங்கள் முடிவுகள் எடுக்க முடியாமல் முடமாகி விடும் அவல நிலையைக் காண்கிறோம். எனவே

- ❖ வாழ்வையும் குழந்தைகளையும் மதிக்க உதவுதல்.
- ❖ வறுமை, வரதட்சனைக் கொடுமை, புரிந்து கொள்ளாமை இவற்றால் சிதையும் குடும்பங்களை இணைத்தல்.
- ❖ பொருளாதார நிறைவுக்கு வழிகாட்டல்.
- ❖ கிறிஸ்தவ மதிப்பீடுகளில் குழந்தைகளை வளர்க்கத் தூண்டுதல்.
- ❖ நற்செய்தி அறிவிப்பு, சமய நற்பணிகளில் ஈடுபடத் தூண்டுதல்.

மேற்கூறிய இன்னும் பல நல்ல விளைவுகளை உருவாக்க இருதயகுளம் பங்கிலும் குடும்ப நல வாழ்வு மன்றம் அமைத்து செயல்படுவது காலத்தின் கட்டாயம். அருட்சகோதரர்கள், அருட்சகோதரிகள் மற்றும் பங்குப்பணியாளர்கள் இவர்களோடு இணைந்து திறமையும் அனுபவமுள்ள பங்கு உறுப்பினர்களும் இந்தப்பணியை சிறமேற்கொண்டு செயல்படுத்துகின்றனர். வீடுகள் சந்திப்பு, ஆன்மீக அறிவுரைகள், கவுன்சிலிங் போன்றவை கொடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.[35]

[35] நேர்காணல் - **திரு. அல்போன்ஸ்**, வின்சென்ட் தே பவுல் சபை உறுப்பினர், இருதயகுளம் நாள்: 15-01-2012

**மாணவர்களுக்கான பணி:**

இன்றைய மாணவர்கள் நாளைய சமுதாயத்தின் தூண்கள். இவர்கள் சிறுவயதில் கற்ற சிறிதளவு மறைக்கல்வியோடு, இன்று மின்னல் வேகத்தில் மாறிவரும் சமுதாயத்தோடு போராடி வருகின்றனர். பெரும்பாலான உயர்நிலை மற்றும் கல்லூரி மாணவர்கள் இன்று கிறிஸ்தவ அமைப்புகளில் இல்லை. கிறிஸ்தவ கல்வி நிறுவனங்களும் தங்கள் கல்வித் தரத்தை மட்டுமே உயர்த்துவதைக் குறிக்கோளாகக் கொண்டு செயல்படுவது வேதனை அளிப்பதாக உள்ளது. இந்நிலையில் மாணவர்களை நல்ல குடிமக்களாக, கிறிஸ்தவர்களாக மாற்றும் பணி திருச்சபையின் தலையாய பணியாக உள்ளது.

கல்வி நிறுவனங்களில் செயல்பட்டு வரும் இளங்கிறிஸ்தவ மாணவர் இயக்கம், அனைத்திந்திய பல்கலைக் கழக மாணவர் இயக்கம் செயல்பட்டு வருகிறது. பல கிறிஸ்தவ மாணவர்கள் வேறு பல நிறுவனங்களிலும் தங்கள் கல்வியைத் தொடர்கின்றனர். எனவே காலத்தின் சூழல் கருதி பங்கு அளவில் மாணவர்களை ஒருங்கிணைத்து அவர்களை மனிதராக வளர்பதும் திருச்சபையின் கடமையாகும். எனவே அவர்களுக்கான இளம்மாணவர் இயக்கம், பீடச்சிறுவர்கள் இயக்கம் போன்றவை ஆரம்பிக்கப்பட்டு செயல்படுத்தப்படுகின்றது.[36]

**மறைக்கல்விப் பணி:**

மறைக்கல்வி என்பது ஒரு மனிதர் திருமுழுக்கில் பெற்ற இறைநம்பிக்கையில் வளர்ந்து, முதிர்ச்சி பெற்ற கிறிஸ்தவ வாழ்வு வாழ துணை செய்வதாகும். எனவே சிறுவருக்கு மட்டும் மறைக்கல்வி என்றில்லாமல் வாழ்வு முழுவதும் மறைக்கல்வி என்ற நிலையை உருவாக்க வேண்டும்.

[36] நேர்காணல் - **செல்வி. மெர்சி,** ஆசிரியை, இருதயகுளம் நாள் 30-01-12

மறைக்கல்வியென்பது இறைமகன் இயேசுவைப்பற்றியும், விவிலியம் பற்றியும், திருவருட்சாதனங்கள் பற்றியும், திருச்சபையின் தோற்றம், வளர்ச்சி, நமக்கு அதில் உள்ள பங்கு பற்றியும் அறிந்து கொள்வதாகும். இந்த மறைக்கல்வி ஆண்டு இதில் சிறப்புக்கவனம் பெற அழைப்பு விடுக்கிறது.

மனிதன் தன் வாழ்க்கை அனுபவங்களில் இறைவனை சந்திக்கவேண்டும். அவரோடு உரையாட வேண்டும். அவரை தன் வாழ்வாக, வாழ்வின் ஊற்றாக வாழ்வளிக்கும் வள்ளலாக ஏற்று அவருடன் உறவுகொண்டு அவருக்கே தன்னை முற்றிலும் அர்ப்பணித்து வாழவேண்டும் இதற்குப் பயிற்சி வேண்டும். இத்தகைய இப்பயிற்சிகளைக் கொடுப்பதே மறைக்கல்வியாகும்.

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் காலைத் திருப்பலி முடிந்தவுடன் சிறுவர், சிறுமியருக்கு மறைக்கல்வி வகுப்புகள் நடைபெறுகின்றது. பயிற்சிபெற்ற இளைஞர்கள் மற்றும் இளம்பெண்கள் மறைக்கல்வி வகுப்புகளை நடத்துகின்றனர். அனைத்து கிறிஸ்தவக் குழந்தைகளும் இதில் கலந்துகொண்டு சிறப்புச்செய்கின்றனர். கிறிஸ்தவ மறைப்போதனை மற்றும் கிறிஸ்தவ அறநெறி ஆகியவற்றை உள்ளடக்கிய மறைக்கல்வி வகுப்புகள் மாணவர்களை இறைபக்தியிலும் ஒழுக்கத்திலும் வளர துணைசெய்கின்றது.[37]

**ஒப்புரவுத் திருப்பணி:**

இறையாட்சிக்கும் நற்செய்தி அறிவிப்புக்கும் பெருந்தடையாக இருப்பது கிறிஸ்துவின் சீடர்கள் குழுவாகிய திருச்சபையில் ஒருவர் ஒருவருக்கிடையே உள்ள பிளவுகள், வேற்றுமை, போட்டி, எதிர்ப்பு மற்றும் பகை. இந்த இழி நிலையை மாற்ற திருச்சபையின் அனைத்து நிலைகளிலும் ஒப்புரவுப் பணி மேற்கொள்ளப்பட வேண்டும். கிறிஸ்தவத்தின் மையமாக இருப்பது மன்னித்தலும் ஒப்புரவாதலும். இது நடைமுறைப்படுத்தப்படாத இடத்தில் கிறிஸ்தவம் இல்லை.

[37] மறைக்கல்விமன்ற அறிக்கை 2010-2011

நிலப்பிரச்சனையாலும், பிரிவினைச் சகோதரர்களின் தவறான போதனையாலும், RSS இயக்கங்களின் தூண்டுதலாலும் பல்வேறு இடையூறுகளை இருதயகுளம் பங்கு சந்தித்து வருகின்றது. ஒப்புரவுக்கான அழைப்பைக் கொடுத்தபோதும் மக்கள் விரோதப்போக்கை கடைபிடிக்கும் சில சமூகவிரோதிகள் சமூகத்தின் அமைதியை திட்டமிட்டு சீரழித்துவருவது கவலையைத் தருகின்றது.[38]

**இளையோர் பணிக்குழு**

இளையோர் என்போர் எப்போதும் இடைவிடாமல் இயங்கிக்கொண்டிருப்பவர். வாழ்வெனும் கொடையை உயிர்த்துடிப்புடனும், உற்சாகத்துடனும், உயிரோட்டத்துடனும் வாழ்ந்து மகிழ்பவர். இளையோர் ஆற்றல் மிக்கவர்கள், சக்தி நிறைந்தவர்கள். அவர்களின் சக்தியை ஆற்றலை ஒருங்கிணைத்தால் இவ்வுலகையே அசைக்கமுடியும். இயேசு கொணர்ந்த இறையாட்சியை இம்மண்ணில் வேரூன்றச் செய்ய முடியும். இருதயகுளம் பங்கின் நம்பிக்கை நட்சத்திரங்களாக இருப்பவர்களும் இந்த இளைஞர்கள் தான். பங்கின் அனைத்துச் செயல்பாடுகளிலும் முழு ஈடுபாட்டுடன் செயல்பட்டு பங்குத்தந்தையின் வலதுகரமாக செயல்பட்டு வருகின்றனர். லூர்து மாதா இளையோர் இயக்கத்தில் தற்போது 175 இளைஞர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். படிப்பு, வேலை, தொழில் ரீதியாக பல்வேறு பகுதிகளில் சிதருண்டு கிடக்கும் இளைஞர்கள் திருவிழா மற்றும் முக்கியமான நேரங்களில் ஒன்றுகூடி வந்து விழா நிகழ்வுகளைத் திட்டமிட்டு செயல்படுத்துகின்றனர். இளையோர் இளம்பெண்களை தயார் செய்யும் விதமாக பங்கின் சார்பாகவும் மறைமாவட்ட அளவிலும் ஏற்பாடு செய்யப்படும் கருத்தரங்குகள் மற்றும் பயிற்சி வகுப்புகளில் ஏராளமான இளைஞர்கள் மற்றும் இளம்பெண்கள் கலந்து பயன்பெறுகின்றனர்.[39]

---

[38] நேர்காணல் - **செல்வன். விஜய் பவுல் பிராங்கிளின்,** வழக்கறிஞர், சிவந்திபுரம் நாள்: 20-02-2012

[39] நேர்காணல் - **செல்வன். செல்வின்,** இளையோர் மன்றச் செயலர், இருதயகுளம் நாள்:25-01-2012

**ஊடகத்தொடர்புப் பணி**

21 ஆம் நூற்றாண்டை தகவல் புரட்சியுகம் என்று சொல்லுவார்கள். இன்று தகவல்களை உருவாக்குவதிலும் அதனை பல்வேறு மக்களுக்கு கொண்டு செல்வதிலும் தொழில்நுட்பக்கருவிகள் பல்வேறு தரப்பினரால் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இருதயகுளம் பங்கிலும் நவீன தொழில்நுட்பக் கருவிகளை நற்செய்தி அறிவிப்பின் கருவியாகவும் தகவல் பறிமாற்றத்தின் சிறந்த வாய்ப்பாகவும் பயன்படுத்திவருகின்றனர். கணினிமயப்படுத்தப்பட்ட பங்கு அலுவலகத்தில் பங்கின் அனைத்துக் குடும்பஉறுப்பினர்களின் தகவல்கள் மற்றும் அன்பியங்கள் பற்றிய விவரங்கள் சேமித்து வைக்கப்பட்டிருக்கின்றது. இருதயகுளம் பங்குக்கென தனி வலைத்தளம் உருவாக்கப்பட்டு பங்கின் செயல்பாடுகள் விழா நிகழ்வுகள் போன்றவை நிழல் பதிவுகளாக, வீடியோ காட்சிகளாக வெளியிடப்பட்டு வெளியூரில் வெளிநாடுகளில் வாழும் பங்குமக்களோடு தொடர்பை ஏற்படுத்தி வருகின்றனர். சமூக வலைத்தளமான Facebook லும் irudayakulam என்ற பகுதியில் பங்கின் நடவடிக்கைகள் முக்கிய நிகழ்வுகள் பற்றிய நிழல்பதிவுகள் வெளியிடப்பட்டு தகவல்கள் பரவலாக்கப்பட்டு மக்களின் கருத்துக்கள் பெறப்படுகின்றது. இன்னும் இந்தப்பங்கின் கல்வெட்டுக்கள் வரலாற்றுச் சிறப்புமிக்க பகுதிகள் புத்தகமாக, ஆவணப்படங்களாக, குறுந்தகடுகளாக வெளியிடுவதற்கான முயற்சிகள் நடைபெற்றுவருகின்றன.

## சிறப்பு இடங்கள்

விண்ணைத்தொடும் அகஸ்தியர் மலையினிலே, தென்பொதிகைச் சாரலிலே, வற்றாத தாமிரபரணிஆறு ஓடும் அருகினிலே, மலைகளும், நதிகளும்,

வயல்வெளிகளும், பஞ்சாலையும், கல்விக்கூடங்களும் இணைந்து அழகூட்டும் நகரம் தான் **விக்கிரமசிங்கபுரம்**. இதன் அங்கமாக விளங்கிய உச்சங்குளத்திற்கு வருகைதந்த திருஇருதயசபையை உருவாக்கிய **அருட்தந்தை கௌசானல்** அவர்களின் உழைப்பால் உருவானதுதான் இருதயகுளம் பங்கு திருஇருதயம் ஆலயம்.

லூர்து அன்னையின காட்சி தந்த **'மெசபியேல்'** மலை போன்று இயற்கையாக அமைக்கப்பட்ட அன்னையின் அருள் இடம் பொதிகை மலைத் தென்றல் அரவணைப்பில் கம்பீரமாக விற்றிருக்கும் தூய லூர்து அன்னை ஆட்சி செய்யும் புண்ணிய பூமி. வற்றாத அருள் வளங்கள் அள்ளித் தரும் அன்னையின் அற்புதக் காட்சி வேண்டிவரும் மக்கள் அதற்கு சாட்சி.

**கல்வாரி மலை :**

உலகத்தின் மீட்புக்காக இயேசு தன்னையே அர்ப்பணித்த சிலுவையின் காட்சி இது. சிலுவையினால் தான் மீட்பு என்பதன் அடையாளம். இந்தக் கல்வாரி மலை கண்ணீரோடும், கவலையோடும் வரும் மக்கள் ஆறுதல் பெறும் அற்புத இடம். வாழ்க்கையில் வீழ்ச்சியுற்றோர் நம்பிக்கை துளிர் பெற்று புதுமைகள் காணும் இடம்.

**திரு இருதய கெபி :**

இயேசு சபையின் இல்லத்தில் இருந்த ஆலயம் பங்கு ஆலயமாக செயல்பட்டது. அந்த ஆலயத்திற்கு முன்னால் இயேசுவின் அளப்பறிய அன்பை எல்லா மக்களும் உணர்ந்து கொள்ளும் அடையாளம் இந்த திரு இருதய கெபி ஆகம்.

**ஆரோக்கிய அன்னைக் கெபி :**

அம்பலவானபுரம் மக்களுக்கும், பயணம் செய்து நெடுந்தூரம் செல்லுகின்ற மக்களுக்கும் அருள் பாவிக்கும் அற்புத இடம்.

**ஆரோபண அன்னை குருசெடி :**

அகஸ்தியர்பட்டியில் விநாயகர் காலணியில் வியப்புற எழுந்து நிற்கின்ற ஆரோபணமாதாகெபி, பாதையில் செல்கின்ற ஒவ்வொருவருக்கும் ஒளி கொடுக்கும் அருள் இடம். விண்ணகத்தின் வெற்றி அன்னை மண்ணக மக்களுக்கு மனமுவந்து அளிக்கும் அருள் கொடையின் அடையாளம் ஆரோபண அன்னை குருசெடி.